17.02.2025. O.S.N0.231/2022 ,D.W. 2 சொரிமுத்து

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ள முகவரியில் 1992 முதல் குடியிருக்கிறேன். என்னுடைய சொந்த ஊர் கங்கைகொண்டான் அணைத்தலையூர் ஆகும். நான் கூலி வேலை செய்கிறேன். எனக்கு குறிச்சியில் சொந்தமாக சொத்துக்கள் கிடையாது. சொக்கநாதர் கோவில் தெருவில் சொரிமுத்து என்ற பெயரில் மொத்தம் 3 பேர் இருக்கிறார்கள். ஒரு சொரிமுத்து இறந்துவிட்டார். மற்றொருவர் தங்கவேல் பாண்டியன் மகன் சொரிமுத்து என்பவர் இருக்கிறார். எனக்கு ரேஷன் கார்டு மற்றும் வாக்காளர் அடையாள அட்டை எந்த முகவரியில் உள்ளது என்றால் சொக்கநாதர் 4வது தெருவில் உள்ள முகவரிக்கு உள்ளது. அது 1ம் பிரதிவாதியின் வாடகை வீடாகும். என்னுடைய வயது 61 ஆகும். என்னுடைய 31வது வயதில் குறிச்சியில் குடியிருந்தேன். அப்போதும் கூலி வேலை தான் செய்து வந்தேன். எனக்கு முத்தையாதேவர் மற்றும் அவரது மனைவி முப்பிடாதியம்மாளை தெரியும். முத்துலெட்சுமி என்ற லெட்சுமியையும் தெரியும். அவருக்கு எப்போது திருமணம் முடிந்தது என்று எனக்கு தெரியாது. திருமணத்திற்கு பின்னர் அவர் மீனாட்சிபுரத்தில் வாழ்ந்து வந்தார். நான் லெட்சுமியிடம் சொத்து சம்மந்தமாக பேசும் போது சுமார் 16,18 வயது இருக்கும். அப்போது எனக்கு கொஞ்சம் விவரம் தெரியும். அப்போது பேச்சு வார்த்தையின்போது என்னுடன் வல்லநாட்டைச்சேர்ந்த மாயாண்டித்தேவர், மற்றும் மணக்கரை சுப்பையாத்தேவர் வந்தார்கள். என்னென்ன சொத்துக்கள் சம்மந்தமாக அவர்கள் பேசினார்கள் என்றால் அவர்கள் பேசினார்கள். நான் பக்கத்தில் இருந்தேன். வயக்காடு மற்றும் வீடுவாசல் சம்மந்தமாக பேசினார்கள். சொத்து சம்மந்தமாக பேசும்போது பத்திரம் தயார் செய்து கொண்டு செல்லவில்லை. பேச்சு வார்த்தைக்குபின்னர் பத்திரம் எழுதிக்கொண்டார்களா என்று எனக்கு தெரியாது. நான் 1ம் பிரதிவாதியின் மனைவி வழியில் சொந்தம் ஆவேன். சொத்துக்கள் சம்மந்தமாக முத்துலெட்சுமி என்ற லெட்சுமியிடம் பேச்சு வார்த்தை நடந்தவாகவும் அப்போது நான் உடன் இருந்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின்

மனைவிக்கு சொந்தமாக இருப்பதால் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.